REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 9உ செவ்வாய் (24—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 10உ புதன் (25—12—57) [இதழ் 165

## ஆட்சி மொழிபற்றி தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு

ஐதராபாத் டிச. 24—

இந்தி ஆட்சி மொழியாக்கப்படுவது பற்றி ஆராய்ந்து ஒருமுகமான கருத்தை அறிவிக்க தென் மாநில முதலமைச்சர்கள் டிசம்பர் 30-ந் தேதி கலந்து பேச ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இம்மாநாட்டில் சென்னை, ஆந்திரா, மைசூர் ஆகிய மாநில முதலமைச்சர்கள் கலந்துகொள்வார்கள் என்று தெரியவருகிறது.

# 'நேரு நம்மைத் திட்டுவதற்குத் துணிச்சல் பிறந்தது எப்படி?'

## 'பிற கட்சிகளின் கிளர்ச்சிகளில் மனதைப் பறிகொடுத்து விடாதீர்'

## 'குறிப்பிட்ட இலட்சியத்துக்காகப் பாடுபடும் தி. மு. கழகம் சபல உணர்ச்சிக்கு ஆட்பட்டுவிடாது'

### சென்னைப் பொதுக்கூட்டத்தில் அண்ணா விளக்கம்

சென்னை, டிச. 24—

கடந்த 21—12—57 மாலை சென்னை 12-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய பேருரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"நீங்கள் நல்ல ஆர்வத்தோடும், மிக்க மகிழ்ச்சியோடும் இங்கு கூடியிருக்கிறீர்கள். மிக நெருக்கடியான இந்த இடத்திலே நீங்கள் கூடியிருப்பதுபோலவே, உங்கள் வாழ்க்கைச் சுமையையும் தாங்கிக்கொண்டு உழைக்கும் மக்களாக இருக்கிறீர்கள். இதேபோலத்தான்; மிக நெருக்கடியான நிலையிலே இந்த நாட்டில் பலர் வாழ்கிறார்கள். இந்த நிலையைக் கண்டு பரிதாபப்படாதவர் யாரும் இருக்க முடியாது.

"இங்குள்ளதைப்போல வறுமைக் கொடுமையைத் தாங்கும் பொறுமையுணர்ச்சியை வேறு எந்த நாட்டிலும் காண முடியாது.

இப்பொறுமை உணர்ச்சியை, வீணாக, நாடாள வந்தவர்கள் தூண்டிவிட முடியாது.

"கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளும் மனதைப் பெற்றிருக்கிறார்கள் இந்த நாட்டு மக்கள் என்பதைச் சாக்காக வைத்துத்தான், பண்டித நேரு இங்கு வந்தபோது, பொது மக்களைத் தாறுமாறாக ஏசிப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். கஷ்டப்படும் மக்களைப் பார்த்து, எதிரிகள் எதுவும் சொல்ல முடிகிறது. தமிழ் நாட்டுக்கு வரும்போதெல்லாம், பண்டித நேரு துணிவுடன் எதையும் பேசுகிறார் என்றால், அந்தத் துணிவு அவருக்கு ஏற்படக் காரணம் இருக்கிறது.

"ஒரு கட்சியை அவர் திட்டுகிறார் என்றால், அவர் திட்டுகிற போது மற்றக் கட்சிக்காரர்களெல்லாம் சும்மாயிருந்துவிட்ட தைரியம்தான் இன்று பெரியாரை அவர் தாறுமாறாகத் திட்டக் காரணம்.

"நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தி. மு. கழகத்தைத் தாக்குவதற்கென்று தமிழ் நாட்டுக்கு வந்தார் பண்டித நேரு; அப்பொழுது டால்மியாபுரம் என்ற ஊரின் பெயரை மாற்றி 'கல்லக்குடி' என்று பெயர் வைப்பதற்காக ஒரு போராட்டமும் பண்டித நேருவுக்கு நம் எதிர்ப்பை அறிவுறுத்த இரயில் நிறுத்தப் போராட்டமும் நடத்தினோம்; அப்பொழுது இரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தியதற்குக் காரணம், அதற்கு முன்பு சிவஞான கிராமணியின் போராட்டத்தைக் குறிப்பிட்டு, 'சிறுபிள்ளைத்தனம்' 'அர்த்தமற்றது' என்றெல்லாம் திட்டினார் நேரு என்பதற்காகத்தான்.

"அப்பொழுது, தமிழரசுக் கழகக்காரர்களைத்தான் திட்டினார் என்றாலும், எங்களுடைய மனமும் கொதித்தது. எங்கள் மனக்கொதிப்பை நேருவுக்குக் காட்டத்தான் இரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தினோம்; மற்றும், கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டமும் நடத்தினோம்; மொத்தம் 5000-க்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றார்கள்.

"நேரு திட்டியது சிவஞான கிராமணியாரைத்தானே என்று நாம் சும்மாயிருந்துவிடவில்லை; தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பகுதியினரைத் திட்டினால் தமிழர் எல்லோருமே எதிர்க்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டால், அதன் பிறகு ஆணவத்துடன் பேசமாட்டார் பண்டித நேரு.

"நாங்கள் போராட்டம் நடத்திய நேரத்தில், சிவஞான கிராமணியாரும், பெரியாரும், மற்றும் கம்யூனிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும், 'தி. மு. கழகம் செய்தது நியாயம்தான்' என்று எடுத்துக்காட்டி நமக்கு தார்மீக ஆதரவு கொடுத்திருந்தால், இந்தத் தடவை வந்தபோது நேரு பெரியாரைத் திட்டியிருக்கமாட்டார்.

"அப்பொழுது சிவஞான கிராமணியார் என்ன சொன்னார்—'என்னைத் திட்டினால் அதற்கு இவர்கள் ஏன் போராட்டம் நடத்துகிறார்கள்?' என்றார்; பெரியார் என்ன சொன்னார்—'இவர்களைப் பார்த்து இதைச் சொல்லாமல் வேறு என்னதான் சொல்வார்' என்றார்.

"நேரு, தமிழ்நாட்டில் உள்ள ஒருவரைத் திட்டினால் வேறு கட்சியிலுள்ளவர்களெல்லாம் அதை ஆதரிப்பார்கள் என்று கருதித்தான், பெரியாரையும், நாட்டு மக்களையும் தாறுமாறாக—ஆணவத்துடன் திட்டியிருக்கிறார். 'நேரு, அவர்களைத்தானே சொன்னார்; அவர்கள் நம்மை ஆதரிப்பவர்கள் அல்லவே' என்பதால், நாம், 'நேரு சொல்லியது சரி' எனக் கூறமாட்டோம்.

"தி. மு. கழகம் கண்ணியத்தின்மீது கட்டப்பட்டது; எனவே, 'நேரு கூறியது மிகமிகக் கண்டிக்கத் தக்கது' என்று பகிரங்கக் குற்றஞ் சாட்டுகிறேன். இதை நான் கூறும்போது, 'நெருக்கடியான நேரத்தில் அண்ணாதுரை எனக்குக் கைகொடுத்தானே' என்று, என்னை பெரியார், ஆதரிப்பார் என நான் நினைக்கமாட்டேன்.

"'திராவிடர் கழகமும் தி. மு. கழகமும் இந்நேரத்தில் எங்கே ஒன்று சேர்ந்துவிடுமோ' தம் பிழைப்பு கெட்டுவிடுமோ என அச்சப்படுபவர்களும் உண்டு; 'இந்த நேரத்திலாவது அவை இரண்டும் ஒன்று சேராதா?' என்று ஆசைப்படுபவர்களும் உண்டு.

"அச்சப்படுபவர் யார் என்பதும் எனக்குத் தெரியும்; ஆசைப்படுபவர்களையும் எனக்குத் தெரியும். இந்நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன் — இந்த இரண்டு சாராரையும் திருப்திப்படுத்த முடியாத நிலையில் நான் இருக்கிறேன்.

"ஊரிலே திருமணங்கள் பல நடக்கின்ற நேரத்தில் தெருவிலே போகின்ற திருமணமாகாத வாலிபன் ஒருவன், பெரிய பந்தலாகப் போட்டிருக்கும் திருமண வீட்டைப் பார்த்து, 'இப்படிப்பட்ட பந்தலைத்தான் எனது திருமணத்துக்கும் போடவேண்டும்' என்று நினைத்தால், அதில் தப்பில்லை. பந்தலைப் பார்த்தவுடன் அந்த எண்ணம் மட்டும்தான் வரும். ஆனால் அந்த வாலிபன், அந்தத் திருமண வீட்டுக்குள்ளேயும் நுழைந்து, 'இந்தப் பெண்தான் எனக்குப் பிடித்திருக்கிறது; இந்த திருமணமே எனக்குத்தான்' என்று கூறினால் என்ன ஆகும்?

"அதைப்போல, எந்த விதத்திலும் பெரியாருடைய கிளர்ச்சியை—போராட்டங்களை நம்முடையதாக்கிக் கொள்ள முடியாது. பெரியாரிடம் நாம் பந்தல் அளவுக்குத்தான உரிமை கொண்டாட முடியும்.

"நான் முன்சொன்ன அந்த வாலிபனுக்கு உரிய பெண் மண்குடிசையிலும் இருக்கலாம்; ஆடம்பரமாகத் திருமணம் செய்துவைக்க முடியாத அளவுக்குத் தகப்பன் வறியவனாக இருக்கலாம்; மேளக்கச்சேரி — பாட்டுக் கச்சேரி வைக்கமுடியாத, அறுசுவை விருந்து அளிக்க முடியாத நிலையிலிருக்கலாம்; காலையிலே திருமணம் நடந்து மாலையிலே கணவன் வீட்டுக்கு பெண்ணை அனுப்பிவைக்கக் கூடிய நிலையிலிருக்கலாம்; என்றாலும், தனக்குப் பிடித்த பெண் பெரிய கல்யாண வீடுகளிலே இருப்பதைப்போல, நாட்டில் பல கட்சிகள் கிளர்ச்சிகள் நடத்தலாம்; அதைக்கண்டு நாம் மனதைப் பறிகொடுத்துவிடக் கூடாது.

"இரண்டு கழகங்களும் ஒன்றானால் என்ன—என்று கேட்கப்படுகிறது; நான் முதலில் சொல்லியபடி இரண்டுக்கும் நடுவில், ஆசைக்கு ஆட்படாமல், அச்சத்துக்கு உடன்படாமல் தி. மு. கழகம் தனக்கொத்த கோட்பாடுகளை வகுத்துக்கொண்டுதான் எட்டாண்டுக்காலமாக இயங்கி வருகிறது. இப்பொழுது இந்தச் சபலம்தட்டுகிறது என்றால், அந்தச் சபலத்தை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"எனக்கும் அந்தச் சபலம் சில சில வேளைகளிலே ஏற்படுவதுண்டு; இருந்தாலும், 'கூடாது' என்று நான் சொல்லுகிறேன் என்றால் பிடிவாதத்தால் அல்ல—கொள்கையிலுள்ள பிடிப்பால்தான்.

"திருச்சிக்குப் போக வேண்டுமென்று முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்டு செல்பவர்கள் இரயில் நிலையம் சென்றதும் திருச்சி இரயிலை விட்டுவிட்டு, கூட்டமில்லாத வண்டிதான் சௌகர்யமாயிருக்கும் என்று கருதி சேலம்போகும் வண்டியிலா ஏறிப்போவார்கள்?

"அதைப்போல, தி. மு. கழகம் தனக்கென ஒரு திட்டவட்டமான கொள்கையை முன்கூட்டியே தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறது.

"அதிக ஆளில்லாத எந்த வண்டியாக இருந்தாலும் அதில் ஏறுபவர்களும் இருக்கிறார்கள். அப்படி ஏறுபவர்களில் மூன்று வகையினர் இருக்கிறார்கள். எந்த வண்டியில் ஏறினால் என்ன, வயிற்றுப் பிழைப்பு நடந்தால் சரிதான் என்று எண்ணும் பிச்சைக்காரர்கள் ஒரு வகை; ஏமாந்தவர்கள் ஜேபியிலே கத்தரிக்கோல் போடுபவர்கள் ஒருவகை; மூன்றாவது வகையினர் பொழுதுபோக்க ஆள் கிடைக்கவில்லையானால் கிடைக்கிற வண்டியிலே ஏறுவார்கள்.

"தி. மு. கழகம் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்துக்காக, அதை அடைவதற்கான முறைகளை வகுத்துக்கொண்டு, தகுந்த பலனை பக்குவமாகப் பெறுவதற்குப் பாடுபட்டு வருகிறது. அந்த இலட்சியத்தை அடையும் வரை அது சபலத்துக்கு ஆட்பட்டு ஓடாது. அச்சப்படுபவர்களுக்காக தி.க.-வுடன் ஒன்று சேராது என்று சொல்லவும் முடியாது.

"தஞ்சையிலே பெரியார் பேசியதாக சில பத்திரிகைகளில் வந்த செய்திபற்றி கேட்கப்பட்டதற்கு, நான் இராயப்பேட்டையிலே நடந்த ஒரு கூட்டத்திலே பதில் சொன்னேன். அந்தச் செய்தி மதுரையிலிருந்துவரும் 'தமிழ்நாடு' பத்திரிகையில் சற்று விளக்கமாக வந்தது. மற்றப் பத்திரிகைகளிலே குறிப்பாக வந்திருந்தது. 'திராவிடர் கழகத்துக்கும்—தி. மு. கழகத்துக்கும் அடிப்படையில் வித்தியாசமில்லை; என் காலத்துக்குப் பிறகு திராவிடர் கழகம் எங்கே இருக்கப் போகிறது? எனவே, இரண்டும் ஒன்றாகச் சேர்ந்தால் நல்லதுதான்; சேர வேண்டுமென்று விரும்புபவர்கள் முயற்சி செய்தால் வரவேற்கிறேன்' எனப் பெரியார் கூறினதாக அந்தச் செய்தியில் கண்டிருந்தது. அதைப் பார்த்ததும், எனக்குக்கூடக் கொஞ்சம்—திருமணப் பந்தலைப் பார்த்த வாலிபனைப்போல சபலம் தட்டிற்று. நான்கூட கொஞ்சம் ஆசைப்பட்டிருந்தேன். நான் அப்பொழுது சொன்னேன்—'பெரியார் இப்படிப் பேசியிருப்பது உண்மையானால், பெரியாரின் 'விடுதலை' பத்திரிகையிலே அறிக்கையாக வரட்டும்'—என்று! அப்படியின்றி, அது வெறும் நிருபரின் சாடு என்றால், இன்னொரு நிருபர் தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று சொன்னேன்.

"அதே பத்திரிகையிலே, பின்னும் இரண்டு தினங்களுக்கெல்லாம் திருச்சியிலிருந்து ஒரு செய்தி வந்திருந்தது; நான் "எங்கே அப்படிச் சொன்னேன்? 'நான் செய்வது பிடித்தால், வா; இல்லையேல் போ' என்றுதானே சொன்னேன்" என்று பெரியார் பேசியதாக அந்தச் செய்தி கூறியது.

"இத்தோடு விட்டாரா? சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில், தம் தோழர்களுக்குக் கூறியிருக்கிறார்—கண்மூடி தன்னைப் பின்பற்ற வேண்டுமென்று; தான் சிறைக்குப் போனால், அண்ணாத்துரை, 'தந்தை பெரியாரை காமராசர் சிறையிலடைத்துவிட்டார்' என்று தூற்றினால் அவன் பின்னாலே போய்விடக்கூடாது; அவர்கள் அப்படித் தூற்றுவதற்கு விடக்கூடாது; காமராசருக்கு விரோதமாக எதுவும் செய்யக்கூடாது—என்று கூறியிருக்கிறார்.

"எனவே, நாம் யாருக்கும் எந்த விதச் சபலமும் வேண்டாம். பெரியாரின் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் நாம் எப்படியிருந்தோமோ, அப்படியே இனியும் இருப்போம்."

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—12—57 செவ்வாய்

# என்று துடைக்கப்படும்?

பாரின் பல பகுதிகளில் உரிமைகளுக்காகப் போராடிய மக்கள் சமீபகாலமாக வெற்றி முரசுகொட்டி, புதுவாழ்வின் புதிய திருப்பத்தை அடைந்து வருவதை நாம் காண்கிறோம். தென்னகத்தில் குடிபுகுந்த அன்னியர்களும் இன்று அல்லல் நீங்கி இன்புற்று வாழ்கின்றனர். ஆனல், தென்னகத்தில் வாழவழியின்றி, கடல்கடந்து அன்னிய நாடுகளில் குடியேறி உழைத்து ஊதியம் பெற்றும், சில சமயங்களில் உயிரைத் தந்தும் வாழ்ந்துவரும் தென்னவர் நிலை மிகவும் கவலைக்குரியதாகி வருகிறது. அங்கு அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு, விரட்டப்படும் நெருக்கடியான நிலை வளர்ந்து வருகிறது.

வெளிநாடுகளிலுள்ள இந்தியர் நலனைப்பற்றி இந்தியப் பேரரசு கடைப்பிடிக்கவரும் கொள்கை, தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் பிரச்சினையில் காட்டப்படும் தீவிரம், இலங்கையில் வாழும் இந்த நாட்டு மக்களைப் பொறுத்த வரையில் காட்டப்படவில்லை.

இந்த நாட்டையே டெல்லிப் பெரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு வெறும் அரியாசனத்தில் அமர்ந்திருப்பதில் ஆறுதல் பெறும் இம்மாநில ஆட்சியாளர்கள், கடல் கடந்த தென்னவர் நிலைகுறித்துக் கவலைப்படாமல் இருந்து வருகின்றனர்.

அன்னிய நாடுகளில் நம்மவர் படும் அவதியைக் கேட்டு, அடிமைப்பட்டுக்கிடக்கும் தாயகத்து மக்கள் தக்க பரிகாரம் தேடமுடியாத நிலையில் உள்ளனர்; எனவே, ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களுக்கு உண்மையை உணர்த்துவதுடன், நிலைமையை ஆராய்ந்து தக்க பரிகாரம் காணச் செய்வதை தனது முக்கிய பணிகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது நம் கழகம் என்பது நாடறிந்த உண்மையாகும். இருந்தும், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் தங்கள் அலட்சியப் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. அறம் வழுவா ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய நாம், இன்று இரக்கமற்ற அரக்கர்களிடம் நீதிக்காக ஏங்கி நிற்கும் நிலையில் உள்ளோம்.

பாரெல்லாம் புகழப்படுபவர் —சிறந்த அரசியல் மேதை— பெரும் வல்லரசுகளுக்கே நல்ல பல யோசனைகள் கூறும் ஆற்றல் மிக்கவர் என்றெல்லாம் அலங்கார அடைமொழிகளில் வருணிக்கப்படும் பண்டித நேரு, பல ஆண்டுகளாக இலங்கை வாழும் இந்தியர் நிலைக்கு மாற்றம் காண ஈடுபட்டு வந்துள்ளார். முன்பு பண்டிதர் இலங்கைக்கு அழைக்கப்பட்டார்; பல இடங்களில் பாராட்டுக்களைப் பெற்றார்; பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்; ஆனல், இலங்கைத் தமிழர் நிலைபற்றி பேசப் அவசரம் தேவையில்லை என்று கருதி, முடிவு காணமலே டெல்லி திரும்பினர்; பின்னர், இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா டெல்லி வந்தார்; இருவரும் கலந்து பேசினர்களாம். இந்த உரையாடலின் விளைவாகப் பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினைக்கு முடிவு ஏற்படும் என்று எதிர்பார்த்த நமக்கு பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக, இரு பிரதமர்களுக்கும் இதுவரையில் தெரிந்திராத பல உண்மைகள் வெளிப்பட்டனவாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போதிய நிதி வசதியின்றி திண்டாடும் இந்தியப் பேரரசு, 'இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவியளிப்பதாக வாக்குறுதியளித்துள்ளது' என்று, இலங்கைக்குப் புறப்படுகையில், விமான நிலயத்தில் பண்டா அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கைத் தமிழர்களின் துயர் துடைப்பது எவ்வாறு? எப்போது? இன்னும் எத்தனை ஆண்டுகள் டெல்லிப் பெரியவர்கள் அலட்சியப் போக்கைக் கடைப்பிடிப்பர்? மீண்டும் இரு பிரதமர்களும் சந்தித்து பேசுவார்களா? நீதி நிலை நாட்டப்படுமா? இடையில் தமிழரின்நிலைஎன்ன? உலக நாடுகளைக் கண்டுகளிப்பதில் நாட்டம்கொண்ட பண்டித நேருவுக்கு எப்போது இதற்கு ஓய்வு கிடைக்கும்? அப்படிக் கிடைத்தாலும் முழு அளவு உண்மைக்காகப் பண்டிதர் பாடுபடுவாரா?—என்றெல்லாம் ஐயுறவேண்டியுள்ளது.

பலவற்றிலும் தென்னாட்டைப் பற்றிக் கவலைகொள்ளாது இருக்கும் டெல்லிப் பெரியவர்கள், இலங்கைத் தமிழர் விஷயத்தில் காலம் கடத்திவருவதில் வியப்பொன்றுமில்லை.

அயல்நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் மேலும் பாதிக்கப்பட்டு பல இடுக்கண்களுக்கு ஆளாகி வருகின்றனர். இந்நிலையில், நீதி வழங்கப்படுவதில் மேலும் காலம் கடத்தப்படுவது நீதியாகுமா என்று எண்ணிப பார்க்கவேண்டும். காலம் கடந்து கொண்டேபோனல் எதிர்காலம் எவ்வாறு இருக்குமோ என ஐயுறும் மக்களின் நிலை மேலும் பாதிக்கப்பட நேரிடும் என்பதை டெல்லிப் பெரியவர்கள் உணரவேண்டும்.

இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை இலங்கையில் குடியுரிமை கோரிய மனுக்கள் 2,37,034 என்றும், அவைகளில் இலங்கை அரசாங்கம் 2,17,993 மனுக்களை மட்டுமே ஆராய்ந்துள்ளது என்றும், தள்ளப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மட்டும் 1,87,788 என்றும், இதன் விளைவாகக் குடியுரிமை கோரிய 8,00,000 பேர்களில் 6,47,360 பேர் குடியுரிமை இழப்பர் என்றும் இந்தியப் பேரரசு புள்ளி விவரங்களைச் சேகரித்து, பாராளுமன்றத்தில் பரிமாறியுள்ளது. இச்செய்தி கடல் கடந்து கவலையுறும் தென்னவரின் நலனை நாடுபவர்களுக்கு நிச்சயம் தேனக இனிக்காது; மாறாக, தேள் கொட்டிய வேதனையைத்தான் அளிக்கும்.

இலட்சக்கணக்கில் குடியுரிமை மனுக்கள் மறுக்கப்படுகின்றன இலங்கையில்! உலகப் புகழ் தேடும் பண்டிதரே, பூரித்து வரவேற்கிறார் பண்டாவை, டெல்லியில்!

பண்டிதர் பல ஆண்டுகளாக எந்த அளவில், எந்த உள்நோக்குடன், இலங்கை இந்தியர் பிரச்சினையை அணுகியுள்ளார் என்பதற்கு இதுவே, போதிய சான்றாக அமைந்துள்ளது. குடியுரிமை மறுக்கப்படுவது, அவர் தொடர்ந்து பேசிவருவதின் கைகண்ட பலன் போலும்!

பண்டிதருக்கு இருப்பதாகக் கூறப்படும் செல்வாக்கு தென்னவர் கண்ணீரைத் துடைக்கப் பயன்படவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

இந்தியாவும் இலங்கையும் அண்டை நாடுகள்; அரசியல் துறையில் பல ஒற்றுமைகள் மலிந்துள்ள நாடுகள்; வாணிபம் தொழில் போன்ற துறைகளில் தொடர்பு கொண்ட நாடுகள்; இருந்தும், பல ஆண்டுகளாகப் பரிகாரம் தேடப்படவில்லை, இலங்கை இந்தியர் அவல நிலையை அகற்ற! ஏன் இந்தக் குறைபாடு!

இந்த இக்கட்டான நிலைமைக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆராய்வது, நல்ல முடிவுகாண முற்பட்டுள்ளவர்களின் பொறுப்பும், உடனடியான கடமையும் ஆகும்.

பிணியால் பீடிக்கப்பட்ட நோயாளியின் வியாதி, அளிக்கப்படும் மருத்துவத்தின் பயனுகத்தான் தீரவேண்டும்; இல்லையேல், டாக்டரின் திறமையிலும் வைத்திய முறையிலும் சந்தேகம் காண்பது இயல்பு. இதே போன்றுதான் பண்டிதர் தேடும் பரிகாரமும் உள்ளது!

அடிமைப்பட்டுக் கிடக்கும் தாயகத்தை விடுவிக்கும் ஆக்கப் பணியில் ஈடுபட்டுள்ள தென்னவர் மனம் புண்பட, மேலும் இலங்கைத் தமிழர் நெருக்கடியை வளரவிடுவது டெல்லிப் பெரியவர்களின் திறமைக்கும், இயம்பப்படும் செல்வாக்கிற்கும், தூய அரசியல் பண்பாட்டிற்கும் உகந்ததாயிராது என்பதை நாம் கூறாமலே உலக வரலாற்றினை அறிந்தவர்கள் உணர்வார்கள்.

நல்லுறவுடன் பழகிடும் இரு நேசநாடுகளின் பிரதமர்களும் அறவழியில் சென்று, அநீதியை அகற்றி, ஆக்கப் பணியில் ஈடுபட்டு, அகிலம் போற்றும் முறையில் தக்க பரிகாரம் தேட வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

## உணவுக் கலப்படம்

### 'சட்டம் நிறைவேற்றினுல் மட்டும் போதாது'

மைசூர், டிச. 22—

"மட்டரகமான இனிப்புகள, மலர் ஐஸ்கிரீம்கள், பொது இடங்களில் விற்பனை செய்யப்படுவதை தடுக்கவேண்டும்; அவை மக்களின் உடல் நலத்தைப் பாதிப்பவையாக உள்ளன. கடைகளில் விற்கப்படும் நெய்யில் 80 சத விகிதம் வனஸ்பதி கலப்படம் செய்யப்படுகிறது; இதே போன்று, காப்பி பவுடர், தேயிலை, மிளகு, பருப்பு முதலியவற்றில் கலப்படம் காணப்படுகிறது.

"வெறும், உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தை நிறைவேற்றினுல் மட்டும் போதாது; அவற்றை தீவிரமாக அமுல் நடத்த வேண்டும்" என்று, மத்திய உணவு ஆராய்ச்சிக் கழக உதவி டைரக்டர் டாக்டர் பாடியா தெரிவித்துள்ளார்.

# இடைக்கால நிவாரணம் போதுமானதல்ல; ஏமாற்றமே!

## 'போராட்டம் நின்றுவிட்டதாகக் கருதாதீர்'

### சர்க்காருக்கு தபால் ஊழியர் எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 21—

"கிராக்கிப் படி உயர்வு என்ற பெயரில் மாதம் ரூ. 5 மட்டும் இடைக்கால நிவாரணமாகத் தர சிபாரிசு செய்யப்பட்டிருப்பது போதுமானதல்ல என்பதை சம்பளக் கமிஷனுக்கு உணர்த்துவதற்காக, தபால்—தந்தி இலாகா ஊழியர்கள், வரும் சனவரி திங்கள் சம்பள நாளன்று சம்பளம் பெற மறுத்துவிடுவதென முடிவு செய்திருக்கின்றனர்.

ஊழியர்கள் அனைவரும் சம்பள மறுப்பு இயக்கத்தில் ஈடுபடுமாறு, ஊழியர்களின் சம்மேளனம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதை ஒட்டி விடுத்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில், சம்மேளனம், 'சம்பளக் கமிஷனின் சிபாரிசு, இப்போதைய வாழ்க்கைச் செலவைச் சரிக்கட்டுவதற்குக் கொஞ்சங்கூடப் போதுமானது அல்ல' என்று எடுத்துரைத்துள்ளது.

'சம்மேளனம், சிபாரிசு கண்டு திருப்திகொள்ளுவதற்கு இல்லை' என்று கூறும் அந்தக் குறிப்பு, விலைப் புள்ளிக்குத் தக்கதாக, கிராக்கிப் படி தரவேண்டும்' எனவும் வற்புறுத்தியுள்ளது.

★

## 'போராட்டம் முடியவில்லை'

டெல்லி, டிச. 22—

"தபால்— தந்தி ஊழியர்கள் வேலைநிறுத்தத்த முடிவை வாபஸ் பெற்றுக்கொண்டது போர் நிறுத்தம்தானே தவிர, போராட்டம் முடிந்துவிட்டதாகக் கருதாதீர்"

என்று, சர்க்காருக்கு தபால் ஊழியர் சம்மேளனத் தலைவர் வி. ஜி. தால்வி எச்சரித்துள்ளார்.

'தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள இடைக்கால நிவாரணம் மிகக் குறைவானது என்பதால், ஊழியர்களிடை பெருத்த ஏமாற்றமும், மனக்கசப்பும் ஏற்பட்டிருக்கின்றன; சர்க்காரின் இந்தப் போக்கு, ஊழியர்களை அவமானப்படுத்துவதாகவே — புண்படுத்துவதாகவே இருக்கிறது என நான் கருதுகிறேன்.

### வெள்ளையர் செய்யாதது

"1944-ம் ஆண்டிக்-13 ஆண்டுகளுக்குமுன் தபால்காரர் சங்கம, கிராக்கிப் படி உயர்வுக்காகக் கிளர்ச்சி செய்தபோது, அப்போதிருந்த அன்னிய சர்க்கார்கூட, கணிசமான அளவு நிவாரணம் வழங்கியதுடன், ஒரு சம்பளக் கமிஷனும் நியமித்தது. வெள்ளையர் ஒன்றும் அவசரச் சட்டம் பிறப்பிக்கவில்லை; அல்லது, ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை சட்டவிரோதமானது என்று கூறவில்லை; அல்லது, 'சிவில் சர்வீஸ்' விதிகளைத் திருத்தவும் இல்லை; ஆனல் இன்று நமது தேசிய சர்க்காரின் போக்கு மிகுந்த ஏமாற்றம் தருவதாக இருக்கிறது.

"இரண்டாவது சம்பளக் கமிஷனில் தொழிலாளரின் பிரதிநிதிகள் ஒருவர்கூட இல்லை; எனவே, இந்தக் கமிஷன், உருப்படியாக ஏதேனும் நமக்குச் செய்யும் என்று நாங்கள் எதிர்ப்பதற்கு இல்லை"

என்றும் தால்வி கருத்தறிவித்திருக்கிறார்.

## அரிசி கட்டாயக் கொள்முதல்

### 6-மாநிலங்களுக்கு அதிகாரம்

மாநிலங்களில் விளையும் அரிசியைக் கொள்முதல் செய்யும் அதிகாரத்தை 6-மாநிலங்களுக்கு அளிக்க மத்திய அரசாங்கம முன்வந்துள்ளதாகத் தெரிகிறது

சென்னை, மைசூர், மத்தியப் பிரதேசம், ஒரிசா, மேற்குவங்கம், அசாம் ஆகிய 6 மாநிலங்களுக்கு மட்டுமே இந்த உரிமையளிக்கப்பட்டுள்ளது; ஆனல், கொள்முதல் விலைகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுமாம்; ஆனல் அசோக்மேத்தா குழுவின் சிபாரிசுப்படி, மணங்கு ரூ. 15 முதல் ரூ. 17 வரையில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றனவாம்.

இப்போது மத்திய அரசாங்கம் ஆந்திர மாநிலத்திலும் பஞ்சாபிலும், அரிசியைக் கட்டாயக் கொள்முதல் செய்துவருகிறதாம்.

சமுகத்தின் நெறிகுறைவுக்குக்

## காரணம் என்ன?

### மக்கள் சபையில் எதிரொலி!

புதுடில்லி, டிச. 21—

"இரும்பைக் காந்தம் கவர்வதும், மலரை வண்டு நாடுவதும்' இயற்கை; அதே போன்று, பெண்களின் அழகும் ஆண்களைக் கவருகிறது" என்று, மக்கள் சபையில், திரு. பன்னுலால் என்பவர் கூறி, 'இன்றைய சமூகத்தின் நெறிகுறைவுக்கு பொறுப்பாளிகள் பெண்களே' என்று குற்றம் சாட்டினர்.

"இன்றைய பெண்கள் நவநாகரீகம் என்ற பெயரால் ஆண்களின் நிலையைத் தடுமாறச் செய்கின்றனர்" என்று அவர் கூறியதும், திருமதி மனிமாதா என்பவர் குறுக்கிட்டு,

"ஆண்கள் ஏன் பெண்களுக்கு அலங்கார — ஆடம்பர அழகுப் பொருள்களை வாங்கித் தரவேண்டும்?' என்று கேட்டு, "பெண்கள் அழகுப் பதுமைகளாக பவனி வருவதற்கு ஆண்கள்தான் காரணம்" என்று குற்றஞ்சாட்டினர்.

இதைக் கேட்டதும் அவையில் ஒருவர், "நாங்கள் என்ன செய்வது? பெண்கள் பிடிவாதம் செய்கிறார்களே!" என்றார்.

அதற்கு திருமதி மனிமாதா, "உங்களுக்குத்தான் உடம்பைப் பிடித்துவிடத் தெரியுமே!" என்றதும், சபை, நகைப்பில் ஆழ்ந்தது.

## 'முதலமைச்சருக்கும் விதிவிலக்கில்லை'

அனந்தப்பூர், டிச. 23—

'நிலவுடைமைக்கான உச்ச வரம்பை நிர்ணயித்து கவர்னர் பிறப்பித்துள்ள உத்தரவு என்னையும் கட்டுப்படுத்துவதாகும்; எல்லோரும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும"

என்று ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவி ரெட்டி தெரிவித்துள்ளார்.

"அமைதியை நாடுவோர் சொத்துக்களைத் துறப்பது அவசியம்" என்றும் அவர் கூறினர்.

## திறந்தவெளிச் சிறை!

ஐதராபாத், டிச. 22—

நாகார்சுனசாகர் திட்டப் பகுதியில் சுமார் 2,000 கைதிகளுக்கான திறந்த வெளிச் சிறையொன்றை ஏற்படுத்தும் திட்டம் பற்றி ஆந்திர மாநில அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

இந்தச்சிறை அமைப்புக்கு 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படுமாம்; கைதிகளுக்கும் வேலை வாய்ப்புகள் தரப்படுமாம.

இது இரண்டாவது திறந்த வெளிச் சிறையாகும்; முதலாவது திறந்த வெளிச் சிறை ஐதராபாத்தில் உள்ளது.

## மாமல்லபுரத்தில் வார்ப்படப் பயிற்சித் தொழிற்சாலையாம்!

சென்னை, டிச. 21—

மாமல்லபுரத்தில் வார்ப்படப் பயிற்சித் தொழிற்சாலையொன்று ஆரம்பிப்பதற்கு சென்னை அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. ஓராண்டுக்காலத்திற்கு ரூ. 40 உதவி ஊதியம் அளித்து 5 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுமாம். இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ. 14,920 மானியமாக அளித்துள்ளதாம்.

## சென்னை சர்க்கார் பஸ்போக்கு-வரத்து

### நவம்பர் மாத வருமான விவரம்

சென்னை, டிச. 21—

நவம்பர் திங்களில் சென்னை சர்க்கார் பஸ் போக்கு-வரத்தில் கட்டணமூலம் ரூ. 12,93,556 வருமானம் கிடைத்துள்ளதாம்; நாள்தோறும் மொத்தம் 322 பஸ்கள் ஓடியுள்ளதாம். விடுமுறை நாட்களில் சராசரி 273 பஸ்கள் ஓடியுள்ளதாம்.

இந்தத் திங்களில் 1,03,57,685 பேர் பிரயாணம் செய்துள்ளனர்—11,16,411 மைல்கள் ஓடியுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிந்து கொள்ளுங்கள்!

புதுடில்லி, டிச. 21—

"ஆயுதத் தளவாட உற்பத்தி சாலையில் 1956, செப்டம்பர் மாதம் 15-ந் தேதியன்று வேலையினின்றும் ஆட்குறைப்பு செய்யப்பட்ட 4,063 தொழிலாளர்களில் 192 பேர்களுக்கு மட்டும்தான் இன்னும் வேலை கிடைக்க வேண்டியிருக்கிறது" என்று மத்திய தொழிலாளர் நல துணை அமைச்சர் மக்கள்சபையில் தெரிவித்தார்.

## புற்று நோய் சிகிச்சை!

### சீன மருந்து பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லையாம்!

புதுடில்லி, டிச. 20—

புற்று நோய் சிகிச்சைக்குப் பயன்படுவதாகக் கூறப்படும் 'ஆன்றினுமைசின் கே' எனும் மருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுவதில்லையாம்!

சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாகக் கூறப்படும் இந்த மருந்து பற்றி எந்தவிதத் தகவல்களும் கிடைக்கவில்லையென்று மக்கள்சபையில், கேள்வி நேரத்தின்போது மத்திய அமைச்சர் கர்மார்கர் தெரிவித்துள்ளார்

## பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி!

### ஆந்திர-தமிழக அதிகாரிகள் முடிவு

ஐதராபாத், டிச. 19—

பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி பற்றி, ஆந்திர—தமிழக சர்க்கார்களின் அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தைகள் முடிந்துவிட்டன.

200 மைல் நீளமுள்ள இந்தக் கால்வாய் அபிவிருத்திக்குடெல்லி சர்க்கார் ரூ. 1·2 கோடி தருவதாகக் கூறியுள்ளனராம்.

கிருஷ்ணா நதிப் படுகையில், குண்டூர் மாவட்டத்தில்,பாபட்லா எனும் இடத்தில் துவங்கும் இந்தக் கால்வாய், 200 மைல் ஓடி சென்னை வருகிறது; பின்னும் 60 மைல் ஓடி, திண்டிவனத்தில் முடிகிறது.

இந்தக் கால்வாயைப் போக்குவரத்திற்காக உபயோகிப்பதே அபிவிருத்திசெய்வதின் நோக்கம்.

ஆந்திர மாநிலப் பகுதியில் கால்வாயில் 160 மைல் நீளத்தை அபிவிருத்திசெய்ய ரூ. 80 இலட்சமும், சென்னை மாநிலத்தில் 35 மைல் நீளத்தை அபிவிருத்தி செய்ய ரூ. 40 இலட்சமும் தேவைப்படும் என்று பேச்சுவார்த்தைகளின் முடிவில் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனராம்.

## 1 கோடி டாலர் மதிப்புள்ள ஆலை உலோகங்கள்

### இந்தியாவுக்கு வழங்க கனடா முன்வருகிறது

ஆட்டாவா, டிச. 21—

இந்தியாவுக்கு அடுத்த 6 அல்லது 8 திங்களில் 108,00,000 டாலர் மதிப்புள்ள ஆலை உபயோகத்திற்கான உலோகங்களைத் தருவதற்குக் கனடா முன்வந்துள்ளது; கொழும்பு திட்டத்தின்கீழ் இந்த உதவி அளிக்கப்படுமாம்.

## இந்தியாவுக்கு மேலும் கனடாவின் உதவி

ஆட்டாவா, டிச. 21—

70 இலட்சம் டாலர் மதிப்புள்ள கோதுமை இந்தியா—கனடா அணு உலைக்கு மேலும் 20 இலட்சம் டாலர்; மின்சாரக் கம்பிகள் அமைக்க 50 இலட்சம் இரயில்வே வளர்ச்சிக்கு 30 இலட்சம் டாலர்; மூன்று கோபால்ட் புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள் அமைக்க 1,20,000 டாலர் கல்வி சாதனங்களுக்கு 65 000 டாலர்—என்ற வகையில், இந்தியாவுக்கு அளிக்கப்போகும் கனடா உதவி அமைந்துள்ளது.

## கல்லூரியில் சமுதாய அபிவிருத்தித் திட்டம்

### பல்கலைக் கழகங்களில் அமுல்

புதுடில்லி, டிச. 20—

சமுதாய அபிவிருத்திபற்றிய கல்வியை ஆக்ரா, நாகபுரி, உத்கல், டெல்லி ஆகிய பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பு, பட்டப்பிற்கால படிப்பு ஆகியவைகளின் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதென்றும், வேறு பல பல்கலைக் கழகங்களும் அதுபற்றி ஆராய்ந்து வருகின்றனவென்றும மக்கள்சபையில், மத்திய சமுதாய வளர்ச்சி அமைச்சர் எஸ். கே. டே தெரிவித்துள்ளார்.

## ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

பம்பாய், டிச. 19—

நமது கழக சட்டமன்ற உறுப்பினரான தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், சென்னை சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவினருடன் ஆக்ரா, டெல்லி, பஞ்சாப், பக்ரா-நங்கல், ஹிராகுட முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு இம்மாதம் 19-ந் தேதியன்று பம்பாய் வந்து சேர்ந்தார்.

புதுடில்லியில் நமது கழக பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ. வெ. கி. சம்பத், இரா. தர்மலிங்கம் ஆகியோருடனிருந்து அளவளாவியதுடன், அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியைக் கண்டு கைத்தறித் துணி விற்பனைக் கழிவுத் தொகையை உயர்த்தும்படி வற்புறுத்திவிட்டு வந்திருக்கிறார்.

தோழர் கோவிந்தசாமி அவர்களுடன் சென்ற சட்டசபை மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் கருத்திருமன், எஸ். இராமசாமி, தேனி தியாகராசன், தூத்துக்குடி வீரபாகு ஆகியவர்களாவர். (ந-கி.)

## நேபாளத்திற்கு இந்தியா கடன் உதவி தருகிறது

புதுடில்லி, டிச. 21—

நேபாளத்தின் ஐந்தாண்டுத் திட்ட அலுக்கு இந்திய அரசாங்கம் ரூ. 10 கோடி கடன்தர சம்மதித்துள்ளதாம்.

கடந்த செப்டம்பர் திங்கள் வரையில் ரூ. 1½ கோடி கடன் உதவியளித்துள்ளதாம்.

## நகரசபைப் பள்ளிகளில் உடல் பயிற்சி வகுப்பு

சென்னை, டிச. 21—

சென்னை நகரசபை நடத்திவரும் 10 பள்ளிகளில் உடற்பயிற்சி வகுப்புகள் துவக்குவதற்கான திட்டத்தை அமுலாக்க நகரசபை அதிகாரிகள் திட்டமிட்டிருக்கின்றனர்.

## சென்னைத் தோழர்கள் கவனத்திற்கு:

"சென்னை 3-வது வட்டத்தில், 'உதயசூரியன் அறிவியல் மன்றம்' என்ற அமைப்பு, நமது கழகத்தின் துணை அமைப்பு என்று கூறிக்கொண்டு, நமது கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் மாறுபட்ட முறையில் நடந்துவருவதாகத் தெரியவருகிறது.

"அம்மன்றம் நமது கழகத்தின் துணை அமைப்பு அல்ல என்பதோடு, அதன் நடவடிக்கைகள் நமது கழகத்தின் அதிகாரபூர்வமானதல்ல என்பதால், கழகத் தோழர்கள் அம்மன்றத்திற்கு ஆதரவளிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்று, சென்னை மாவட்ட தி மு கழகத் துணைச்செயலாளர் கோ செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

## சென்னை மிருகங்கள் டெல்லிக்குச் செல்கின்றன!

சென்னை, டிச. 21—

சென்னை மிருகக் காட்சிசாலையிலிருந்து 40 மிருகங்கள் டெல்லி மிருகச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனவாம். இது சென்னை நகரசபையின் ஏற்பாடு. புள்ளிமான்கள் 10; ஷாம்பர் மான்கள் 2; காடி 1; மயில்கள் 2; புறாக்கள் 12—இதில் அடங்கியுள்ளன.

## கைப்பற்றப்பட்ட கள்ளச் சரக்குகளின் மதிப்பு

புதுடில்லி, டிச. 21—

"இவ்வாண்டு நவம்பருடன் முடிவடைந்த மூன்று மாத காலத்தில் மட்டும் ரூ. 1·30 கோடி மதிப்புள்ள கள்ளத் தங்கமும், கடத்தப்பட்ட இதர சரக்குகளும் கைப்பற்றப்பட்டது" என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அரியலூர் உயர்நிலைப் பள்ளியில் தீ விபத்து

### கழகத் தோழர்கள் தீயணைத்தனர்

அரியலூர், டிச. 19—

இன்றிரவு சுமார் 1 மணிக்கு இவ்வூர் கழக உயர்நிலைப்பள்ளியில் 7 வகுப்புகள் கொண்ட இரண்டு கூரைக் கட்டிடங்கள் எரிந்து சாம்பலாயின; உடனே அபாயச் சங்கு மும்முறை முழக்கப்பட்டது. தகவலறிந்த பொது மக்களும், நமதியக்கத் தோழர்களும் பெருவாரியாகச் சென்று தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

பள்ளியிலிருந்த மரச்சாமான்களும், மேசைகளும், எரிந்து சாம்பலாயின. இதனால் சுமார் ரூ. 25,000 பொருட்சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ந. கி.)

## மாநிலங்கள்தோறும் நடைபெறுமா?

புதுடில்லி, டிச. 21—

இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பழம் பொருள்கள், பழைய நினைவுச் சின்னங்கள் ஆகியவைபற்றி மத்திய சர்க்கார் தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஏற்பாடாக சர்வே நடத்திவருவதாக மக்கள்சபையில், அமைச்சர் கே. எல். ஸ்ரீமாலி தெரிவித்துள்ளார்.

## உங்களுக்குத் தெரியுமா?

புதுடில்லி, டிச. 21—

இந்தியப் போரசின் மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம் துவக்குவதற்கு முன்னால் ஆண்டிற்கு 750 இலட்சம்பேருக்கும், அத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதற்குப் பின் ஆண்டிற்கு 193 இலட்சம்பேருக்கும் மலேரியா நோய் பீடித்து வருகிறதாம்!

"இத்திட்டத்திற்காக மத்திய சர்க்கார் இதுவரையில் ரூ. 15,20,55,000 செலவிட்டிருக்கிறது" என்று மத்திய சுகாதார அமைச்சர் மாநிலங்கள் சபையில் கூறியுள்ளார்.

## ரூ. 50-க்கு 10 ஆண்டுக்கால சேமிப்புப் பத்திரங்கள்

### இந்திய சர்க்கார் வழங்கும்

சென்னை, டிச. 21—

வரும் சனவரி முதல் 4 சதவிகித வட்டியுடன், இந்திய அரசாங்கம் 10 ஆண்டுக்கால சேமிப்பு பத்திரங்களைக் கொடுக்க முடிவு செய்துள்ளது என்று ரிசர்வ் பாங்கி அறிவித்துள்ளது.

பணம் கட்டிய 10 ஆண்டுகளில் இந்தத் தொகை திருப்பித்தரப்படும்; விரும்பினால், ஓராண்டு கழிந்தபின்னர் வட்டியில்லாமல் திரும்பவும் பெறலாம்.

## இலங்கையின் கடல் உரிமைகள்!

கொழும்பு, டிச. 22—

இலங்கைத் தீவுக்கு 6 மைல் வரையுள்ள கடல் பகுதி இலங்கைக்குச் சொந்தமானது என்றும், 100 மைல்வரை மீன் பிடிக்கும் உரிமைகள் உண்டென்றும் இலங்கை கவர்னர்-ஜெனரல் குணதிலாகா பிரகடனப்படுத்தியுள்ளார்.

## நாசிக் அச்சகத் தொழிலாளர் குறைகள்

புதுடில்லி, டிச. 23—

நாசிக்கிலுள்ள இந்திய அரசாங்கத்தின் அச்சக ஊழியர்களின் வேலைநிறுத்த முடிவுபற்றி மக்கள் சபையில் கேள்வி ஒன்று கேட்கப்பட்டபோது, மத்திய நிதி அமைச்சர் டி. டி. கே. 'ஊழியர்கள் கோரிக்கைகளை நீதிமன்றத்திற்கு விடும் நோக்கம் இல்லை' என்று தெரிவித்தார்.

ஊழியர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து, நியாயமானவற்றை மட்டும் அரசாங்கம் ஏற்குமாம்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு

## 27, 28-12-57 வெள்ளி, சனிக்கிழமைகளில்

### நாகர்கோவிலை அடுத்த கிருஷ்ணன் கோவிலில்

கலைவாணர் பந்தலில்—சாமி அரங்கில் நடைபெறும்.

★

தலைவர் : **ஈ. வெ. கி. சம்பத் M.P.**

திறப்பாளர் : டாக்டர் **ஏ. அருணசலம்**

**27-12-57 வெள்ளி:**

★

பிற்பகல் :

ப. உ. சண்முகம்
இரெ. இளம்வழுதி
சு. வன்னியப்பெருமாள்
தோழியர் பங்கயற்செல்வி
நாஞ்சில் சேவியர்
எஸ். எஸ். இராசேந்திரன்
மு. கருணநிதி

இரவு:

**எம். கே. கோவிந்தராச பாகவதர்**

அவர்களின் தீந்தமிழ்ப் பாடல்கள் மக்களை இன்பவெள்ளத்திலாழ்த்தும்.

**28—12—57 சனி:**

★

காலை :

காஞ்சி-கல்யாணசுந்தரம்
பி. சாம்
சத்தியவாணிமுத்து
நாஞ்சில்-அன்பெழில்
வி. பி. இராமன்
தர்மலிங்கம் எம்.பி.
சி. பி. சிற்றரசு
கண்ணதாசன்

பிற்பகல் :

எம். எஸ். இராமசாமி
என். வி. நடராசன்
டி. வி. நாராயணசாமி
இரா. செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
இரா. நெடுஞ்செழியன்
அண்ணு

இரவு :

சென்னை தோழமை நாடக மன்றத்தினரின் **'மனித இதயம்'** நாடகம் (சென்னை—ஜார்ஜ் டீட்டியது) நடைபெறும்.

மாநாட்டின் இரு நாட்களிலும் **நாகூர் அனீபாவின்** இன்னிசை உண்டு.

ஒலி, ஒளி ஏற்பாடுகள்: திருச்சி ராபி அவர்கள்.

ஏ. இராமசாமி, பி. சாம் B.A., B.L.
செயலாளர்கள்

கி. மனோகரன் M. A.
வரவேற்புக்குழுத் தலைவர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# ‘ரஷ்யாவில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருப்பானேன்?’

## ‘புரியாத இந்தி மொழியில் எத்தனை விதங்கள் இருக்கின்றன?’

### ஆட்சி மொழி மாநாட்டில் சர் சி. பி. இராமசாமி அய்யர் எழுப்பிய கேள்விகள்

“எனக்கு இந்தி தெரியும்; திரு. இராசகோபாலாச்சாரிக்கும் இந்தி தெரியும்; ஆனல், அபுல்கலாம் ஆசாத் பேசுகிற இந்தி எனக்கோ, சி. ஆர். அவர்களுக்கோ புரியாது. ஆசாத், தனது இந்தியில் ஏராளமான பாரசீக வார்த்தைகளைச் சேர்த்துப் பேசுவார்; ஆனல் நாங்கள் இருவரும், எங்களுக்குள்ள சமஸ்கிருத அறிவின் பின்னணியில் இந்தியைப் பேசுவோம். இந்த வகையில் நாங்கள் இந்தியாவின் கூட்டுக் கலாச்சாரத்தை வளர்க்கிறோம்.

“கடந்த நவ. 18-ந் தேதி மக்கள் சபையில் நடைபெற்ற சம்பவம் மற்றுமொரு எடுத்துக் காட்டாகும். அமல் சந்த் என்பார் பல உப கேள்விகளைக் கேட்டார். உதவி மந்திரி திருமதி இலட்சுமி மேனனுக்கு அமல் சந்தின் கேள்வி புரியவில்லை. பிரதமர் குறுக்கிட்டு, தனக்குக்கூட அமல் சந்த் என்ன கேட்கிறார் என்பது புரியவில்லை என்றும், என்றுலும் பதில் சொல்லத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

“சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானல், எனக்கும் இராசகோபாலாச்சாரிக்கும் ஆசாதின் இந்தி தெரியாது; பிரதமருக்கும் இலட்சுமி மேனனுக்கும் அமல் சந்தின் இந்தி தெரியாது; இப்படிப் பல வகை இந்திகள் இருக்கின்றன.

“நான் காசி பல்கலைக் கழகத்திலிருந்தபோது, பீகாரைச் சேர்ந்த மாணவர்களை, உ. பி. மாணவர்கள் புரிந்துகொள்ள முடியாமலிருப்பதைக் கண்டேன்.

“மேலும், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்போன்ற மொழிகள் முதிர்ந்து உறுதி பெற்றிருக்கின்றன; ஆனல், இந்தி மொழிக்கு இன்னும் நிச்சயமான எழுத்துக்களே இல்லை; இலக்கணமும் இருக்கவில்லை” என்று டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள், ஆட்சி மொழி மாநாட்டுக்குத் தலைமை ஏற்று இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

“தங்களது சிபாரிசுகளை அறிவிக்கும்போது, இந்தியாவின தொழில், கலாச்சார, விஞ்ஞான வளர்சசியையும், இந்தி பேசாத மக்களின் பொதுப் பணிகளைக் குறித்த நியாயமான கோரிக்கைகளையும், நலன்களையும் மனதில் கொள்ள வேண்டுமென் ஆட்சி மொழிக் கமிஷனுக்கு, அரசியல் சட்டத்தின் 344 (3)-வது பிரிவு கட்டளையிட்டிருக்கிறது.

“இந்தக் கூட்டத்தின் முக்கியமான நோக்கம் எல்லாம், இந்த அரசியல் சட்ட விதி, உப விதிகளின் முழுப் பொருளையும் தீர விசாரித்து அறிய வேண்டுமென வற்புறுத்துவதாகத்தான் இருக்க முடியும். இப்போது நாட்டின் முன் வைக்கப்பட்டுள்ள திட்டம், இந்தியாவின் தொழில், கலாச்சார, விஞ்ஞான வளர்சசிக்கு உதவுவதாயிருக்கிறதா? இந்திபேசாத மக்களின் நியாயமான கோரிக்கைகளையும், நலன்களையும் திருப்தி செய்வதாக இருக்கிறதா, அது? இவற்றிற்குத் திட்டவட்டமாக ‘இல்லை’ என்பதுதான் பதிலாகும்.

“ஆங்கிலம் பேசுகிற இங்கிலாந்து அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இன்றைய சீனு நட்புறவு கொண்டிருப்பதை யாரும் அறிய மாட்டார்கள். நான் அண்மையில் அங்கு சென்றிருந்தேன். அவர்கள் புதிதாக ஒரு சட்டம் தயாரித்திருக்கிறார்கள்; தங்களது சொற்களுக்கோ ஒலிகளுக்கோ என்று அமையாத— நேரடியாக எண்ணத்திற்கே வரி வடிவம் தரும் எழுத்து முறைகளுக்குப் பதிலாக லத்தீன் எழுத்துக்களைக் கொண்டுவரும் சட்டம் தான் அது. தங்களின் பெருமைக்குரிய வரி வடிவங்களை விட்டு விட்டு, லத்தீன் மொழி எழுத்துக்களை ஏன் கொண்டுவர வேண்டும்?

“நார்வே, சுவீடன், டென்மார்க், லாட்வியா, லித்துவேனியா, மற்றும் ரஷ்யா இவ்வெல்லாம், ஆரம்பப் பள்ளிகளிலேயே ஆங்கிலம் கட்டாயபாடமாக்கப் பட்டிருக்கிறது. ஏன்? ஏனென்றல், அது எண்ணங்களை வெளிப்படுத்த மிகச் சவுகரியமான கருவியாயிருப்பதுதான்!

“இன்று பொதுவாக அறிவு வளர்சசி, பாடப் புத்தகங்களைவிடப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும்தான் இருக்கிறது என்பதைப் பலர் உணராமல் இருக்கின்றனர்; எனவே, பிரெஞ்சு, அல்லது ஜெர்மன், மற்றும ஆங்கில மொழி அறிவு இதற்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.

“வெளிவருகிற எல்லாப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் அதே நேரத்தில் மொழிபெயர்ப்பதற்கு சர்க்கார் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடும்; ஆனல் இந்த மொழிபெயர்ப்புக்கு, அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவைப்படுகிற பல கோடி ரூபாயும் செலவிட நேரிடும். இது வேடிக்கை அல்ல.

“நான் பணிவுடன் தெரிவிக்க விரும்புவது எல்லாம், இந்தி இப்போதுதான் உருவம் பெற்றுவருகிறது; முதலில் அது வளரட்டும். அது வாயு வேகத்தில் வளர வேண்டும் என்று நான் விருபுகிறேன்.

“அது வளர்ந்த பிறகு, நாம் மீண்டும் ஓர் கூட்டம் கூட்டி, மற்றுமோர் தீர்மானம் கொண்டு வரலாம்.

---

**கழகக் கூட்டம்**

**மேல்ப்பாளையம்:**

கடைத்தெருத் திடலில்

26—12—57 இரவு 9 மணிக்கு

தலைவர்: சே. கா. மு. யூசுப்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

இரத்தினவேல் பாண்டியன்

---

************************************

பன்மொழிப் புலவர்

கா. அப்பாதுரையார் மணிவிழா நிதி

**சிறப்புக் கூட்டம்**

7—1—58 செவ்வாய் மாலை 6-மணிக்கு

சென்னை—தியாகராயநகர் வாணி மகாலில்

தலைவர்: கே. எஸ். இராசமாணிக்கம்

பேசுவோர்:

**அண்ணு, நெடுஞ்செழியன், கண்ணதாசன்**

நன்கொடை: ரூ. 2; 1; அணு 8.

—தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகம், வேளாள தேனும்பேட்டை, சென்னை (46-வது வட்டம்)

************************************

---

# ‘தென்னகம் ஒன்றுபட்டால் வடவர் ஆதிக்கம் செலுத்த முடியாது’

## ‘காலவரம்பு நீடிக்கப்படுவது பிரச்சினைக்குப் பரிகாரமாகாது’

## ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும்

### ஆச்சாரியாரின் ஆணித்தரமான பேச்சு

சென்னை, டிச. 22—

“நாம் விரும்புவது எல்லாம், இந்தி புகுத்தப்படக் கூடாது; ஆங்கிலம் அகற்றப்படக்கூடாது என்பதுதான்.

“இந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள நாம் ஒன்றுபட்டாக வேண்டும். ஒன்றுபட்டால், எவ்வளவு பெரிய எதிர்ப்புகளையும் நாம் தாண்டி விடமுடியும்.

“இந்த விஷயத்தில், வடநாட்டில் நமக்கு உள்ள ஒரே நண்பர் —புரிந்துகொள்ளும ஆற்றல் படைத்த ஒரே மனிதர்—நேரு பண்டிதர்தான்; வேறு எவருமே இல்லை என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆனல், அவரைப் போன்ற அவ்வளவு செல்வாக்கு படைத்தவர்கூட, அவரைச் சுற்றியுள்ள மனிதர்களின் தவறான போக்குகளுக்கு வளைந்து கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதையும் மறந்துவிடுவதற்கு இல்லை.

“நாம் இப்போது ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். நமக்கு எதிராக அளவு கடந்த எதிர்ப்பு இருக்கிறது; இந்த எதிர்ப்பை நாம் சமாளித்தாக வேண்டும். நாம் இங்கே தென்னுட்டில் வாழுகிறோம். வடநாட்டில் உள்ளவர்கள், இந்த மொழிப் பிரச்சினையில் கொண்டுள்ள உணர்ச்சிகளை நாம் அறிய மாட்டோம். வடநாட்டவரின் உணர்ச்சிகள் மிகக் கடுமையாக இருக்கின்றன. எனவே, நாம் போராட்டத்தில் வெற்றி பெற வேண்டுமானல், தென்னுட்டவரும், மேற்கு வங்கத்தவரும், இதர இந்தி பேசாத மக்களும ஒன்றுபட்டு, மிக எச்சரிக்கையுடன் தீவிரமாகப் போரிட்டாகவேண்டும். இல்லாவிட்டால் வெற்றி பெறமுடியாது.

தென்னுட்டின் மீது வடவரின் ஆதிக்கம் பற்றி பேச்சு அடிபடுகிறது. தென்னடு ஒன்றுபட்டிருந்தால், வடநாட்டவர் ஆதிக்கம் செலுத்தமுடியாது. தென்னுடு பிளவுபட்டுக் கொண்டே சென்றல், வடக்கும்— மேற்கும் — கிழக்கும், தெற்கின் மீது ஆதிக்கம் செலுத்தத்தான் செய்யும். எனவே, நாம் பொதுவான பிரச்சினைகளில் மட்டுமல்ல —இதுபோன்ற குறிப்பான பிரச்சினைகளிலும் ஒன்றுபட்டாகவேண்டும்”

என்று, திரு. சி. இராசகோபாலாச்சாரியர் அவர்கள், ஆட்சி மொழி மாநாட்டில், இந்தித் திணிப்பை எதிர்த்து, ஆங்கிலமே வேண்டும என்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய ஆச்சாரியார் அவர்கள் இந்தி திணிக்கப் படுவதால், தென்னுட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய தீங்குகள், ஆபத்துக்கள் பற்றியும், ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்பதற்கான அவசியம் பற்றியும், ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் தெரிவித்த கருத்துக்களை வற்புறுத்தினர்.

இந்தியைக்கொண்டு வருவதற்கான காலவரம்பைத் தள்ளிப் போடுவதினுல் மட்டும் பிரசினை தீர்ந்துவிடாது என்பதைத் திட்டவட்டமாக்கினர்.

‘இந்தி, கொண்டுவரப்படக் கூடவே கூடாது; ஆங்கிலமே நீடிக்கவேண்டும்’ என்பதை வற்புறுத்திய அவர், ‘ஆங்கிலத்தை, இந்த நாட்டு மாணவர்கள் கைவிட்டு விடக்கூடாது’ என்பதையும் எடுத்துரைத்தார்.

---

**பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்ட அழைப்பு**

25—12—57 மாலை 5-30 மணிக்கு எண் 53, புதிய கலாஸிபாளையம் விரிவில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் ஆய்வுக்குவரும்:—

1. பெங்களூர் மாவட்ட இரண்டாவது மாநாடு நடத்துவதற்கான இடம், தேதி, வரவேற்புக்குழு, திறப்பாளர், தலைவர் நிர்ணயித்தல்;
2 மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மன்றங்களுக்கும், படிப்பகங்களுக்கும் மாவட்டத்தில் பிரதிநிதித்துவம் கொடுத்தல்;
3. நகராண்மைக் கழகத் தேர்தல் பிரச்சினைகள்;
4. மாவட்டத்தின் வரவு-செலவுக் கணக்கு.

“எல்லாக் கிளைக் கழகச் செயலாளர்களும் மாவட்டப் பிரதிநிதிகளும் தவறாது வருகை தரவேண்டுமாய்க் கோருகிறேன்” என்று, பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். வி. பதி கேட்டுக்கொள்கிறார்.

---

# பெரியார் நடவடிக்கைகள் மீது த. நா. பொதுவுடைமைக் கட்சியின் பாய்ச்சல்

### திராவிடர் கழகத்திற்கு காமராசர் ஆதரவு இருப்பதாகக் குற்றச்சாட்டு!

திருச்சி, டிச. 22—

பெரியார் இராமசாமி அவர்களுடையவும், திராவிடர் கழகத்தினுடையவும் நடவடிக்கைகளை மிக வன்மையாகக் கண்டிப்பதாக இந்திய கம்யூனிஸ்டு கட்சி தமிழ்நாடு கமிட்டியின் விசேஷ மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதாம்.

நான்குநாள் நடைபெற்ற இரகசியக் கூட்டத்திற்குப்பிறகு நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தில், பெரியாருக்கு காமராசர் சர்க்கார் எல்லாவகையிலும் ஆதரவுகாட்டிவருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறதாம்!

---

************************************

# திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—12—57 ஞாயிறு அன்று நாகர் கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

19--12--’57
‘அறிவகம்’
சென்னை-13

**இரா. நெடுஞ்செழியன்**

பொதுச்செயலாளர் தி. மு. க.

************************************

---

**சென்னை 36-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:**

25—12—57 மாலை 7 மணிக்கு, மேற்படி வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் (வடக்குத் தியாகராயநகர்), நடைபெறும்; அதுபோது வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப் பட்டு, பொங்கல் விழா நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும்.

---

**சொற்பயிற்சிக் கூட்டம்**

25—12—57 மாலை 6 மணிக்கு, சென்னை வண்ணையம்பதி இளங்கோ கலைமன்றத்தில் (31, நாராயண நாய்க்கன் தோட்டம், 7-வது சந்து), தோழர் கோ. குசேகர் தலைமையில், ‘ஜனநாயகம்’ என்ற பொருள்பற்றிப் பலர் பேசுவர்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.